தொழில் உயர் மேற் கற்கைக்கான நிதிஉதவி

தொழில் உயர் தொடர் கல்வி கற்பதற்கு எவ்வளவு செலவாகும்?

- ஆரம்பப் பாடசாலை (பாலர்வகுப்பு/முற்பள்ளி உட்பட) மற்றும் மத்திய பாடசாலைத் தரம் I, அதாவது 11 கட்டாய பாடசாலை வருடங்கள் சுவிசில் வாழும் பிள்ளைகள் மற்றும் இளையோர் அனைவருக்கும் இலவசமானது. சுவிசில் பெரும்பாலான பிள்ளைகள் அரச பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். இருப்பினும் அனைத்துத் தரங்களுக்கும் தனியார் பாடசாலைகளும் உள்ளன, அதில் கற்பவர்களுக்கு அவர்கள் வழங்கும் வசதிகள், வழங்கும் முறை, கற்கும் நபர்கள் மற்றும் இடத்தைப் பொறுத்து கட்டணம் அதிகம் வித்தியாசப்படும். இப்படியான வசதிகளுக்கான கட்டணம் ஒரு வருடத்திற்கு 10‘000.- 15‘000.- சுவிஸ் பிராங்குக்கு குறைவாக (தங்குமிடம் மற்றும் உணவு தவிர) இருக்காது. ஓர் நேர்மையான விலைவிபரம் பெற்றுக்கொள்வது கடினமாகவுள்ளது.
- அடிப்படையான தொழிற்கல்வியின்போது தொழிற்கல்லூரியில் கற்பது மற்றும் நிறுவனத்தில் பயில்வது இலவசமானது. நிறுவனங்களில் செய்முறைப் பயிற்சி பெறுவதற்கு அனைத்து நிறுவனங்களிலும் இருந்தும் அவர்கள் கற்பவர்களுக்கான ஊதியத்தை தொழிலையும் கற்கும் வருடங்களையும் பொறுத்து 300.- தொடக்கம் 1‘600.- சுவிஸ் பிராங் வரையாக இருக்கும்.
- அடிப்படையான தொழிற்கல்வியை ஒரு அரச அல்லது பொதுச்சேவையின் ஆதரவில் நடக்கும் முழுநேரப் பாடசாலையில் கற்றால், உதாரணமாக ஒரு மத்தியதர தொழிற்கல்லூரியாக இருந்தால் வழமையாக அது இலவசமாகும். தொழிற்கல்வியை ஒரு தனியார் நிறுவனத்தில் (உதாரணமாக ஒரு தனியார் தொழிற்கல்லூரியில்) கற்றால் அதற்குக் கட்டணம் செலுத்த வேண்டும், ஒரு தனியார் தொழிற்கல்லூரியில் 3- வருடங்கள் கற்பதற்கு ஏறத்தாழ 17‘000.- சுவிஸ் பிராங் செலவாகும். செய்முறைப் பாடங்களுக்கு செய்முறை ஊதியம் கிடைக்கும். இதற்கு ஒருசில 100 தொடக்கம் 1‘000.- பிராங்வரை மாதாந்தம் ஊதியம் பெற்றுக்கொள்வார்கள்.
- கல்விச்சேவையால் இயங்கும் கிம்நாசியம் மற்றும் துறைசார் பாடசாலைகளில் கற்பதற்கு, அதற்குச் செல்லக்கூடிய தகுதி பெற்ற இளையோருக்கு அநேக மாநிலங்களில் பொதுவாக இலவசமாகும். தனியார் கிம்நாசியம் ஒரு வருடத்திற்கு 10‘000.- 15‘000.- சுவிஸ் பிராங் வரையாக பாடசாலைக் கட்டணத்தைப் பெற்றுக்கொள்வர்.
- ஒரு தொழில் பரீட்சையில் தோற்றி அதை நிறைவுசெய்ய அல்லது உயர் துறைசார் பரீட்சை மற்றும் ஒரு அடிப்படைத் தொழிற்கல்வியின் பின்னர் தொடர்ந்து இரு முக்கியமான மேற்கல்வியை கற்பதற்கு, 10‘000.- 15‘000.- சுவிஸ் பிராங் வரையான செலவை எதிர்பார்க்க வேண்டும்.
- இவ்வாறான தொழில் பரீட்சை மற்றும் உயர் துறைசார் பரீட்சை பெரிய ஒழுங்குமுறைகளுக்கு ஏற்படும் செலவுகள் போன்றே, உயர்துறைசார் பாடசாலைகளில் கற்பதற்கும் அமைந்திருக்கும்.

கல்விச்சேவையால் இயங்கும் துறைசார் உயர்பாடசாலைகளில் கற்பதற்கான கட்டணம் வருடத்திற்கு 1‘000.- தொடக்கம் 2‘000.-இ வரையாகவும், தனியார் கல்லூரிகளில் இது 3‘500.- 5‘000:- வரையாகவும், பல்கலைக்கழகங்கள் மற்றும் சுவிஸ் மத்திய அரச- உயர் தொழிற்கல்லூரிகளில் கட்டணம் இதுபோன்றே இருக்கும், இருப்பினும் இது மேலும் உயர்வடையலாம் (4‘000.-வரையாக).

முக்கியம்: மேலே குறிப்பிட்ட அனைத்து கட்டணங்களும், சுவிசில் தொழிற்கல்வி உயர் மேற்கல்வி கற்பதற்கு எவ்வளவு செலவாகும் என்பது குறித்து உங்களுக்கு ஒரு எண்ணத்தைத் தருவதற்காக அண்ணளவாக வழங்கப்பட்டுள்ளது. இது இடம், நிறுவனம் மற்றும் வசதிகளைப் பொறுத்து அதிகமாகவும் சில சமயங்களில் மிக அதிகமாகவும் இருக்கலாம். இவை காலத்தைப் பொறுத்தும் அதிகரிக்கலாம், அதாவது ஒன்று தொடக்கம் இரண்டுவருடத்தில் இது மாற்றமடையலாம்.

கவனிக்க வேண்டியது என்னவென்றால், உதாரணமாக வெளிநாட்டு மாணவ மாணவிகள் உயர்துறை கல்வியைக் கற்பதற்கு உயர்வான கட்டணத்தை செலுத்துமாறு கோரப்படலாம், அல்லது ஒருவர், கல்லூரி இருக்கும் மாநிலத்தில் இல்லாமல் வேறு மாநிலத்தில் வசித்தால், தொழிற்கல்வி கற்பதற்கு ஒரு மேலதிக கட்டணத்தை செலுத்த வேண்டியிருக்கும்.

இந்தக் கட்டணங்கள் தனியாக பாடங்களுக்கான செலவாகும். இதைவிட மேலதிகமாக பாடப்புத்தகங்கள், அப்பியாசப் பொருட்கள், போக்குவரத்து, பாடசாலைச் சுற்றுலா போன்ற செலவுகள் ஏற்படலாம். தனியார் பாடசாலைகள் சிலவேளைகளில் உணவு மற்றும் தங்குமிட வசதிகளை வழங்கும், நிச்சயமாக அதற்கு செலவு மிக அதிகமாக இருக்கும்.

நீங்கள் ஒரு தொழில் உயர் மேற் கல்விகளை மேற்கொள்ளத் திட்டமிட்டால், முதலில் நீங்கள் அதாவது கற்று முடிக்கும்வரை ஏற்படும் முழுவதுமான வருடாந்த செலவுகளை கணக்கிடுவதுடன், அதற்கு எவ்வாறு நிதியைத் தேடிக்கொள்ளப் போகின்றீர்கள் என எண்ணிக்கொள்வது அவசியமானது,

சில கற்கைகள் தொழிலுடன் சேர்ந்து செய்வதாகும், அதாவது நீங்கள் பகுதி நேரமாக வேலை செய்வதுடன், உங்கள் வாழ்க்கைச் செலவு மற்றும் தொழிற்கல்விக்கான செலவுகளை உழைத்துக்கொள்ள முடியும். ஆனால் அதிக கற்கைகளின்போது இந்த வசதி இருப்பதில்லை.

அப்படியானால் நீங்கள், நிதிஉதவியைத் தேடிக்கொள்ள முயற்சிக்க வேண்டும். சில வேளைகளில் தொழிற்கல்விக்கான கட்டணத்தை அரசு உதவியாக அல்லது கடனாகப் பெற்றுக்கொள்ளும் வசதிகள் உள்ளன. இது உங்கள் வாழ்க்கைச் செலவு முழுவதையும் அடைக்கப் போதுமானதாக இருக்காது. அத்துடன் சிலவேளைகளில் தனியார் நிறுவனங்களும் தொழில்- மற்றம் உயர் கல்வி கற்பதற்கு நிதிஉதவிகளை வழங்குகின்றன. தொழிற்கல்விக்கான நிதிஉதவியை சிலவேளைகளில் கடனாக வழங்கும் ஒரு திட்டமாக அரசு வழங்குகின்றது. இந்தக் கடன்களை தொழிற்கல்வியின் பின்னர் வட்டியுடன் சேர்த்து திரும்பச் செலுத்த வேண்டும். அத்துடன் தனியார் நிறுவனங்களும் கடன் வழங்குகின்றன, உதாரணமாக வங்கிகள் அல்லது கடன் கொடுக்கும் அமைப்புகள் போன்றவை. கடன் எடுப்பதற்கு முன்பாக நன்றாக யோசித்துத் திட்டமிடுங்கள்: எப்போது மற்றும் எவ்விதமான நிபந்தனைகளுடன் நீங்கள் அக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும்? வட்டிவீதம் எவ்வளவு? விசேடமாக சிறிய கடன்களைப் பொறுத்தவரை வட்டி அதிகமாக இருக்கும், வழமையாக அரச அமைப்புகளில் சிறந்த நிபந்தனைகள் இருக்கும்.

நிதித் தேவைகளுக்கான ஆலோசனை தேவைப்படின் தொழில்-, கற்றல்-, மற்றும் எதிர்கால உயர்வுக்கான ஆலோசனை நிலையத்தைப் பாவித்துக் கொள்ளுங்கள். அவர்கள் உங்களுக்கு ஆலோசனை வழங்குவதுடன் தொழில்- மற்றம் உயர் கல்வி கற்பதற்கு நிதிஉதவிகளை வழங்குவதற்குப் பொறுப்பு வகிக்கும் மேலதிக நிலையங்களை (உதாரணமாக கற்றலுக்கு உதவும் ஆலோசனை நிலையங்களை) தொடர்புபடுத்துவார்கள்.

தகவல்கள்

இங்கும் காணலாம் www.berufsberatung.ch/weiterbildungsfinanzierung

voir aussi www.orientation.ch/bourses

vedi anche www.orientamento.ch/finanziamento